செ.வெ.எண் : 48/ ஜூன் நாள் : 23.06.2017

# இராமநாதபுரம் மாவட்டம்

## இராமநாதபுரம் மாவட்டத்தைச் சேர்ந்த இளைஞர்கள் மற்றும் முன்னாள் படைவீரர்களைச் சார்ந்தோர்கள் முப்படை அதிகாரி பணிக்கு விண்ணப்பிக்கலாம்

## மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர்.ச.நடராஜன்,இ.ஆ.ப., அவர்கள் தகவல்

இராமநாதபுரம் மாவட்டத்தைச் சேர்ந்த இளைஞர்கள் மற்றும் முன்னாள் படைவீரர்களைச் சார்ந்தோர்களுக்கு முப்படை அதிகாரி பணிகளுக்கு தேர்வு நடைபெறவுள்ளது. பன்னிரண்டாம் வகுப்பில் இயற்பியல் மற்றும் கணிதம் பாடங்கள் அடங்கிய பிரிவை தேர்வு செய்து படித்திருக்க வேண்டும். வயது வரம்பு 02-01-1999 மற்றும் 01-01-2002 ஆகிய தேதிகளுக்கு இடைப்பட்ட காலத்தில் பிறந்தவராக இருத்தல் வேண்டும். விண்ணப்பதாரர்கள் www.upsconline.in என்ற இணையதளம் வழியாக விண்ணப்பங்களை சமர்ப்பிக்கலாம். பார்ட்-1 விண்ணப்பத்தை சமர்ப்பித்த பிறகு கட்டணம் செலுத்திவிட்டு பார்ட்-2 விண்ணப்பத்தை சமர்ப்பிக்க வேண்டும். ஆன்லைன் வழியாக விண்ணப்பம் சமர்ப்பிக்க கடைசி நாள் : 30.06.2017. கூடுதல் விவரங்கள் அறிய www.joinindianarmy.nic.in, www.upsc.gov.in ஆகிய இணையதளங்களை பார்க்கலாம்.

மேலும் இணையதளம் வாயிலாக மேற்கண்ட பதவிகளுக்கு விண்ணப்பித்த இராமநாதபுரம் மாவட்டத்தைச் சேர்ந்த முன்னாள் படைவீரர்களைச் சார்ந்தோர்கள் அதன் விபரத்தை மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலக வளாகத்தில் உள்ள முன்னாள் படைவீரர் நல உதவி இயக்குநர் அலுவலகத்தில் நேரில் ஆஜராகி தெரிவிக்குமாறு மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர்.ச.நடராஜன்,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், இராமநாதபுரம்**